**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண்.150/2022**

2026–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 09–ம் நாள் திங்கட்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 09.03.2026 | | |
| பெயர்: | நேதாஜி<br>(PW1- Cross ) | தகப்பனார் பெயர்: | சொக்கலிங்கம் |
| கிராமம்: | மாதிரவேளூர் | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | விவசாயம் | வயது : | 67/2026 |

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை : 09.03.2026</u>**

**(ஆரம்பித்த நேரம்–12.25)**

1. நான் என்ன பரிகாரம் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் நான் அடகு வைத்த நிலம் எனக்கு வேண்டும் என்பதற்காக தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தை 1ம் பிரதிவாதி ராமையன் சாகுபடி செய்து வருகிறார். அவர் 2012ம் வருடம் முதல் சாகுபடி செய்து வருகிறார். 2012 ம் வருடத்திற்கு முன்பு நான் சாகுபடி செய்தேன். நான் 2012 க்கு முன்பு சாகுபடி செய்ததற்கான ஆவணங்களை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

2. தாவா சொத்து எனது தாயாருக்கு சொந்தமானது என்றால் சரிதான். நான் பிரதிவாதிகளிடம் அடமானம் வைத்ததற்கு ஆதரவாக ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி அடமானத்திற்கு காலக்கெடு நிர்ணயம் செய்யப்படவில்லை. எப்போது கேட்கப்படுகிறதோ அப்போது திருப்பி தரவேண்டும். நானும், எனது சகோதரியும் பிரதிவாதிகளிடம் ஏற்கனவே தாவா சொத்தை விற்பனை செய்துவிட்டு பட்டா என்னிடம் உள்ளது என்ற காரணத்தால் பிரதிவாதிகளுக்கு எதிராக இந்த வழக்கை தாக்கல்

செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

3. நான் பிரதிவாதிகளிடம் பதிவு செய்யப்படாத ஆவணம் மூலம் கிரயம் செய்து கொடுத்துவிட்டு தற்போது இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது தாயார் தங்கம் கடந்த 1983 ம் வருடம் காலமாகிவிட்டார். எனது தாயார் இறந்த பிறகு நானும், எனது சகோதரியான 2ம் வாதியும் எங்களுக்குள் பாகப்பிரிவினை செய்து கொண்டோமா என்றால் இல்லை. கடந்த 1997 ம் வருடம் ஜூன் மாதத்தில் நான் பிரதிவாதிகளுக்கு கிரயம் செய்துகொடுத்துவிட்ட காரணத்தால் தான் நான் தாவா சொத்தில் அனுபவத்தில் இருப்பதற்கான ஆவணங்கள் என்னிடம் இல்லை என்றால் சரியல்ல.

4. நான் எனது மகளின் திருமணத்திற்காக கடந்த 1997 ம் வருடம் பிரதிவாதிகளின் தந்தையான குஞ்சுராசு என்பவரிடம் தாவா சொத்தை விற்பனை செய்துவிட்டேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தை 2ம் பிரதிவாதி தான் சாகுபடி செய்து வருகிறார் என்பதால், நான் 1ம் பிரதிவாதியிடம் தாவா சொத்தை அடமானம் வைக்கவில்லை என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி தாவா சொத்தை அவரது பெயரில் கடந்த 2021 ம் வருடம் கிரயம் செய்து கொடுக்க கேட்டபோது நான் அவர்களுக்கு எதிராக இந்த வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல.

5. கிராமத்தில் பொதுவாக 3 வருடத்திற்கு தான் அடமானம் வைப்பார்கள் என்றாலும், பிறகு மீண்டும் புதிய அடமானம் ஏற்படுத்தப்படும் என்றாலும் தாவா சொத்தை கிரயம் செய்து கொடுத்ததால் தான் அவ்வாறு புதிய அடமானம் ஏற்படவில்லை என்றால் சரியல்ல.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

**(முடிவு நேரம்– 12.39)**